
# இயற்பியற் கருவூலம்



சி.யமுனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்பியற் கருவூலம் பனுவல் அணி

மானிடன் புலனறிவை அகத்தில் எண்ணங்களாக மாற்றுகின்றான். நாம் எமது அகத்தினை காண்பது இயலாது போல் புறத்தினையும் முழுமையாக காண முடிவதில்லை. இதுவே இயற்கையின் இயங்குவியலாகும். எமது படைப்பின் மூலசக்தியை இறையாகவும் அதனை உணர்ந்தவர்கள் காட்டும் நெறியினை மறையாகவும் நாம் போற்றுகின்றோம். ஐம்புலன்களுக்கு அப்பால் உணர்ந்து எழுதா மறையாக அருளிய ஞானிகளின் வாக்குகள் வேதாந்தமாகும். மறை அருளும் மனிதச்சிந்தனை இணைந்தவை சித்தாந்தங்கள் ஆகவும் வெறுமனே மனிதச்சிந்தனை தத்துவமாகவும் அமைகின்றன. வேதாந்தங்களும் சித்தாந்தங்களும் மெய்ஞானம் ஆகவும் தத்துவங்கள் விஞ்ஞானமாகவும் மானிடன் நோக்குகின்றான். மதம் என்பது மனதின் மதமேயாகும். மனதின் மதமாக மதம் மாறாதிருக்க இயற்பியற்கருவூலம் பற்றிய ஞானம் உதவும். இதுவே சன்மார்க்கமாகும்.

சி.யமுனாநந்தா
தட்சண கைலாயம்
18.02.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்கல்


1. நயினை நாகபூஷணி அம்மன் போற்றிப் பாமாலை 4 - 8
2. நயினை மான்மியம் 9 - 12
3. சைவசித்தாந்தத்தின் கருவூலமாகவும் ஆன்மீகத்தின் ஆழியாகவும் அமையும், நல்லை பொன்னம்பலம் 13 - 18
4. சிவாய நம - சித்தமெல்லாம் சிவமயமே 19 - 26
5. சைவசித்தாந்தமும் இயற்பியலும் 27 – 38
6. நவீன இயற்பியல் கோட்பாடுகளும் திருமந்திரத்தில் பொதிந்துள்ள உண்மைகளும் 39 – 47
7. இயற்பியல் மெய்ஞான விஞ்ஞான அஞ்ஞானம் 48 - 54
8. பிரபஞ்சசாகரத்தில் பல்அகிலங்கள் 55 - 68
9. நவீன இயற்பியல் கண்டுபிடிப்புக்கள் சைவசமய புராண இதிகாச இலக்கியங்களை விளக்குவதற்கு துணை போகும்! 69 - 73
10. Mystics of the Universe 74 - 75
11. How the modern Scientist perceive the Dance of Siva 76 - 84
12. Saiva Siddhanta (Hindu Philosophy) 85 - 92
13. Understanding Saivasiddandam - Sivaganabothum 93 – 97




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.நயினை நாகபூஷணி அம்மன் போற்றிப் பாமாலை

ஆழிவெண்டிரை கரைசேர் நயினையம்பதியினில்
ஊழிசெய் அன்பர்க்கு என்றுமில்இன்னல்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

தானுரைத்திடு நால்வேதம் ஒலித்திட என்றும்
தமிழ்ச்சிவ நெறி தழைக்கும் அவனியில்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

அண்டபிண்டங்கள் யாவும் உணர்ந்த மெய்யறிவினை
தொண்டுசெய் அடியார்க்கு அருளும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

ஆதிகுண்டலியாய் சக்தியின் வடிவினைத் தாயாக
ஓதிஒழுகி வழிபடு செய்தவம் யாதோ
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

பிரிந்துள தோற்றந் தன்னில் அடியவர்க்கு
புரிந்து அருளும் அன்னையே
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி.

கருதிடும் செயல்கள் யாவும் கதியினில்
கரையேறிட அடியவர்க்கு அருளும்
நயினைநாகபூஷணியே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கிய இடுக்கண் ஓங்கியே ஒழிந்திட
வேங்கையின் வீரத்தினை அருளிடும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

ஏற்ற வேத ஆகமங்கள் எம்மினத்தில்
போற்றியே திழைத்திட
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

முன்னுள முடிவுக் கெல்லாம் முதலினில்
என்னுள்ளே காட்சி தரும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

பீடுறும் முதல்வனுக்கு துணையா நின்று
கேடுறும் அடியார் தமைக்காக்கும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி.

அனந்தனை ஆதி நாக ராகி அருளி என்றும்
சினந்தனை மனதில் அகற்றும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

ஏழு தருமுறையுங் கடந்த நாயகி கடைக்கண்ணில்
வழுவற்று வாழும் அருளே
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

சீர்த்த பேரண்டத்தின் உண்மையினை உலகில்
பார்த்தவர்கள் பரவசப்படும் பாம்பினில்
அருளும் நயினை நாகபூஷணியே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத நாயகியாக புவன நாயகியாக
ஏத மில்வாழ்வில் என்றும் உறுதுணை
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி.

தரித்திடும் பிரமனிற்கு மெய்ப்பொருள் உணர்த்திய
வரிகொள் தோல் போர்த்த நாயகன் துணை
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி.

வாய்ந்த செந்திருவும் கலைகளும் நம்மண்ணில்
ஓய்ந்து போகாது அருளும் அன்னை
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

வளைத்திடு மமரர் வாழ்த்தொலி இசைக்க
முளைத்திடும் அறம் அவனியில் திழைக்க
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

சீரியர் சிறப்புடன் போற்றும் புவனேஸ்வரியே
வீரிய வாழ்வு தரும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

ஈர்த்த கருணைக் கடலின் ஆழந்தனை அளவிடா
தோற்ற வாழ்விலும் போற்றும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி
கண்ணுற மக்கட் காட்சி காணிலி ஆனாலும்
விண்ணுறு வியன் மண்டலத்து ஈசனுடன் நவிலும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை உள்ளம் கொண்ட மக்களாய் என்றும்
கொள்ளை செய்யாது வாழ வழிசெய்யும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

செறிந்திடும் இன்னல் வாழ்வதனை எளிதில்
எறிந்திட வண்மை தந்தருளும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

முந்நுறு நாகரியக்கர் தம்மை வணங்கி
வந்துற்ற தலத்தில் என்றும் அருளும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

நாகரானவருக்கு அருளிய தலத்தில்
தாகமில்லாத் தண்ணளி அருளிக்கும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

பற்பல திசையில் இருந்து பராசக்தியின்
பொற் பலன் பெற்றிட போற்றிடும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி.

ஒன்றொரு சக்தியாக காட்சி தரும் நாகம்தனில்
வென்றவரும் மன்றியிடும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

திகழ்ந்திடும் நின்வரம் வேண்டித் தினமும்
புலர்ந்திடும் உதயம் தனில் அருளும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்று சீர் நயினைப்பதி யில் அருள் சுரக்கும்
கன்றுசேர் ஆவினைப்போல் அடியார்க்கு
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

காட்சியில் கரையில் கடல் அருளே
மீட்சி தாளமக்கு என்றென்றும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி

பெற்ற தாலென்னை கற்றதால் உன்னை என்றும்
முற்றற முதலாய் வேண்டும்
நயினை நாகபூஷணியே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நயினை மான்மியம்

நயினை நாகபூசணியம்மனின் தலச்சிறப்பை மெய்யுணர்வால் அறியும் போது அ∴து பாற்கடலில் திருமாலுக்கு அணையாக அமைந்த ஆதிசேடனின் திரு அமைவாக உணர முடிகின்றது. இதனை நயினை மகாகவி நாகமணிப்புலவரின் தல விசேடச் சருக்கத்தின் முதலாவது பாடலில்,

"பாருடன் புகழத்திகழ் சிகாமணிபோதற்
படிந்ததந் தன்
நயினையம்பதியே"

எனக் காணலாம்.

இங்கு சிகாமணி என்பது ஆதிசேடனைக் குறிப்பதாகும்.

தில்லைவனத்தில் வியாக்கிரமபாதரின் வழிபாட்டி-னால் நடராஜப் பெருமானின் ஆனந்த நடனம் கைகூட அதனைக் கண்டு களிக்க திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலிற்கு அணையாக அமைந்த ஆதிசேடன், திருமாலிடம் இருந்து விடைபெற்று நாகலோகம் சென்று அங்கிருந்து ஒரு பிலத் துவாரத்தின் வழியே தில்லையம்பதியை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகலோகத்தில் திரு அமைவின் எச்சமாக புளியந்தீவில் அம்மன் ஆலயம் அமைந்து உள்ளது. இங்கு தற்போதும் நாகசர்ப்பங்கள் மிகுந்து உள்ளன. ஆதிசேடன் தில்லையம்பதியை அடைந்து தனது பாம்புருவை விட்டு மனித உடலோடு ஐந்து தலைகளுடன் பதஞ்சலியாக சிவனை வணங்க திருநடனக்காட்சி அளிக்கும் நாள் கைகூடியது. அந்நாளே தை மாத குருவாரத்தில் பூச நட்சத்திரமும் பூரணையும் கூடிய நன்னாள்.

அன்று தில்லையில் ஆனந்தக்காட்சி தருவதற்கு சிவகாமி சமேதராய் நடராஜர் காட்சி தந்தார். தேவலோகமே அவர் பின்னால் திரண்டிருந்தது. எல்லோரும் "சிவ சிவ" என சிரம் மீது கரம் கூப்பி ஆராதித்தனர். பாற்கடலில் வாமன அவதாரத்தில் திருமால் அருளிய போது கருடப்பட்சியாகவும், வாசுகிப் பாம்பாகவும் இருந்த திருவமைவுகளே தற்போது நயினாதீவில் காணப்படும் கருடன் கல்லும் பாம்புக்கல்லுமாகும். வாமன அவதாரத்தின்போது திருமாலின் சக்கரத்தின் திருவமைவே வல்லிபுரஆழ்வார் ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் உள்ள சக்கரமாகும். ஆலகாலவிடத்தை சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதுமிடறில் தடுத்த பார்வதி அம்மனுக்கும், ஆலகாலவிடம் தாக்காது காத்தது நாக சர்ப்பம். இவ்வாறு நாகம் பூசித்த அம்மனான பார்வதிதேவியே நாகபூசணி. இத்திருவமைவே நாகபூசணி அம்மன் ஆலயத்தில் கர்ப்பக்கிரகத்தில் உள்ள அம்மனும் அதனைப் பூஜிக்கும் நாகமும் ஆகும். இது தேவியின் 64 சக்திபீடங்களில் ஒன்றாகும்.

திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது கிடைத்த அட்சய பாத்திரமே அமுதசுரபி ஆயிற்று. நாகங்கள் ஆதிசேடனின் இரத்தினத்தை அரியணையாக வைத்து வாழ்ந்து வந்தனர். விஸ்ணுவின் அவதாரமான கௌதமரும் இப்புனித தலத்தை தரிசித்தார். இவ்வாறு கௌதம புத்தர் தரிசித்தமையினால், இன்று சிங்கள பௌத்தர்கள் இப்புனித தலத்திற்கு வந்து வணங்கி அருளினைப் பெறுகின்றனர்.

ஆனால் இந்துசமயத்தைச் சேர்ந்தவர்கள் சைவர்கள், வைஸ்ணவர்கள். இத்தலத்தின் புனிதத்தன்மையை முற்றாக அறியாமையினால் இங்கு தலயாத்திரை மேற்கொள்வதில்லை. உண்மையில் இந்துக்கள் தரிசிக்க வேண்டிய புனித தலங்களே நயினாதீவும் புளியந்தீவும் ஆகும். புளியந்தீவில் இன்னும் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகங்கள் ஆதிசேடன் பிலத்துவாதம் வழியாக தில்லைவனத்தை அடைந்தமைக்கான திருவமைவுச் சான்றாகும். இந்நாகங்களே நயினை அம்மனைப் பூஜித்து வந்தன.

சைவர்கள், வைஸ்ணவர்கள், பௌத்தர்களுக்கு புனிதத்தலமாக மட்டுமல்ல மானிடகுலத்திற்கு ஓர் ஆன்மீக மேம்பாட்டிற்கான புனிதத்தலமாக நயினை அமைகின்றது. மேலும் 14 புவனங்களையும் இங்க்குதம் சக்தியின் மையமாக, புவனேஸ்வரி பீடமாகவும் நயினையம்பதி அமைகின்றது. மேலும் 14 புவனங்களையும் இயக்கும் சக்தியின் மையமாக, புவனேஸ்வரி பீடமாகவும் நயினையம்பதி அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சைவசித்தாந்தத்தின் கருவூலமாகவும் ஆன்மீகத்தின் ஆழியாகவும் அமையும், நல்லை பொன்னம்பலம்

ஆறுமுககசுவாமிகளின் வடிவம் பிரபஞ்ச இயக்கத்தின் மூல தத்துவமாகும். இன்றைய இயற்பியல் விஞ்ஞானிகள் பிரபஞ்ச விரிவின் சக்தியினை கருஞ்சக்தி என்றும் அவற்றின் சக்தி வீச்சினை எண் பரிமாண மாணிக்கக்கல்லின் காழலுக்கு ஒப்பானது என்கின்றனர். இதனை எண் அடுக்கு மாதிரியில் விளக்குகின்றனர்.

இருளின் றேற்றுன்பென் உயிரியல் பேற்போக்கும்
பொருளுண்டேல் ஒன்றாகப்போம்

(திருவருட்பயன் 27)

என்று கரும்பொருளின்றேல் உயிரில்லை என திருவருட்பயனில் கூறப்பட்டுள்ளது.

மேலும்

இருளானதன்றி இலதெவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்

(இருண்மலநிலை 22)

அதாவது கரும்பொருளே அகிலத்தில் அனைத்தையும் மறைக்கின்றது என்று மெய்யுணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையே இன்றைய இயற்பியல் விஞ்ஞானிகள் எண்பரிமாண மாணிக்கக்-கல்லில் ஒளிக்காழலுக்கு ஒப்புவமையாக ஆராய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(E8 Lattice Model) இதனையே சைவ மெய்ஞானிகள் ஆறுமுக சுவாமிகளாக முப்பரிமாணத்தில் கண்டுகளித்தனர். ஆறுமுக சுவாமிகளின் ஆதாரம் தாமரையிலும் விதானம் ஆகாயமாகவும் உள்ளது. இதனை ஆன்மீக ரீதியாக விளக்குவதே நல்லை பொன்னம்பலம் அதாவது சைவசித்தாந்தத்தின் காட்சி அளவையாக நல்லை பொன் அம்பலம் அமைந்துள்ளது.

இல்லையிலோம் அருள்ஆட்சி அஃதே
கற்பகக் கடவுளாம் கந்தசாமி திக்கில்
எல்லையிலோம் மஞ்ஞைப்பட்சி மீதே
அற்புதக் கோலமாம் ஆறுமுகம் காணீர்

தில்லை அம்பல மருள்மீட்சி மீதே
நற்பதி நல்லையில் வேலன் பொற்கோயில் புக்கில்
நல்லை அம்பல பொற்காட்சி இனிதே
முற்கால் பிற்கால் தொழுதிட ஏறுமுகம் காணீர்.

மயிலில் ஆறுமுகசுவாமியின் வலம் என்பது பிரபஞ்ச இயக்கத்தின் மெய்யுணர்வின் காட்சி அளவை ஆகும். இதனையே இன்று அகிலத்தின் அடிப்படை இயற்பியல் மாதிரியாக எண்சுருள் மாதிரி (E8 Spiral Model) அணுகுகின்றது. இது திருவருட்பயனில் சைவசித்தாந்த இயல்பு அளவையாக குறிப்பிடப்பட்டு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிலைமை மண்ணுயிர்கள் சாரத்தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

(திருவருட்பயன் பதின்முதுநிலை 2)

ஆறுமுகசுவாமிகளின் உற்பவம் சரவணப் பொய்கையிலே நிகழ்ந்தது. இந்நிகழ்வு பிரபஞ்ச இயக்கத்தினையும் உயிரின் இயக்கத்தினையும் காட்சியளவையில் விளக்குவதாக அமைகின்றது.

ஒருங்கிய பூவும் ஓர் எட்டித ழாகும்
மருங்கிய மாயாபுரி அதன் உள்ளே
சுருங்கி தண்டின் சுழுனையின் ஊடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்து எழும் உய்ந்தே

(2528)

சரவணப் பொய்கையில் தோன்றிய பேரொளி இறையொளி ஆகும். அஃதே ஆறுமுகசுவாமிகளாக மெய்யுணர்த்தப்பட்டது.

பேரொளி ஆகிய பெரிய அவ் வெட்டையும்
பாரொளி ஆனப் பதைப்பு அறக்கண்டவன்
தாரொளி ஆகத்தரணி முழுதுமாம்
ஓர் ஒளி ஆகிய கால்ஒளி காணுமே.

(693)

இதனை நாம் சித்த வெளியில் காணல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகின்ற தீயை முன்னே கொண்டு சென்றிட்டால்
மெழுகு உருகும் பரிசு எய்திடும் மெய்யே
உழுகின்றது இல்லை ஒளியை அறிந்த பின்
விழுகின்றது இல்லை வெளி அறிவார்க்கே

(838)

உள்ளக் கமலத்தே சோதி உதிப்பதனை

திசை எட்டும் தேர்எட்டும் தேவதை எட்டும்
வகை எட்டும் மாநின்ற ஆதிப்பிரானை
வகை எட்டும் நான்கும் மற்றாங்கே நிறைந்து
முகை எட்டும் உள் நின்று உதிக்கின்றவாறே.

(2531)

காந்தக்கல் போன்றதே ஆறுமுகசுவாமிகளது அருள்

கதிர் கண்ட காந்தம் கனவின் வடிவாம்
மதிகண்ட காந்தம் மணி நீர் வடிவாம்
சதி கொண்ட சாக்தி எரியின் வடிவாம்
எரி கொண்ட ஈசன் எழிலி வடிவாமே.

(1653)

மூடர் அறியார் முழுமுதற் பொருளை என்பதனை பின்வருமாறு திருமூலர் குறிப்பிடுகின்றார்.

கத்தும் கழுதைகள் போலும் கலதிகள்
சுத்த சிவன் எங்கும் நோய்வுற்று நிற்கின்றான்
குத்தம் தெரியார் குணம் கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்து இறப்பாரே (1538)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகசுவாமிகளின் மெய்யுணர்தலை மெய்யடியார்களுக்கு விளங்கப்படுத்தத் தேவையில்லை. ஆனால் ஏனையோர்களுக்கு எளிமையாக விளங்கப்படுத்த வேண்டிய கடமை எமக்கு உள்ளது. அதாவது மாணிக்கக்கல்லின் ஒருமுகம்போல் உள்ளதே தங்கவிதானம். அதன் அச்சின் கீழ்முகமாக தாமரை மலரமைந்த பூமி அமைந்துள்ளது. ஏனைய முகங்களாக ஆறுமுகங்களாக கந்தன் அருளுகின்றான். திருமூலர் மூடர் அறியார் மெய்ப்பொருளை எனவும் நரிகள் ஓடின நாதனைக்கண்டு எனவும் குறிப்பிடுகின்றார்.

நரிகள் ஓடின நாதனைக் கண்டதும் என மெய்யுணர்வை உணர்ந்தவர்களை விட்டு அஞ்ஞானம் அகலும்.

தூய பரியில் இருந்த அச்சீவனைப்
பெரிய வியாக்கித்து உள்ளே புகவிட்டு
நரிகளை ஓடத் துரத்திய நாதர்க்கு
உரிய வினைகள் நின்று ஓல மிட்டன்றே.
(2276).

நல்லைக் கந்தனின் அல்லில் இல்லல்
வில்லில் சொல்லில் எல்லில்
அல்லிலும் எல்லிலும் இல்லில் ஆல்
எல்லையில் ஏல்லில் ஆலல்
நல்லையில் அல்லலில் இல்லல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தப் பேருண்மையினை ஆறுமுக-சுவாமிகள், சுவாமி நாதனாக தில்லையம்பல நடராஜத் திருநடனத்திற்கு இணையாக நல்லையம்பலத்தில் அடியவர்களுக்கு மெய்யுணர்த்துகின்றார் என்றால் மிகையில்லை.

யாமிருக்கப் பயம் ஏன்
வாழ்விருக்க வியம் மேன்
யாழிருக்க லயம் நல்வேல்
தாழிருக்க நயம் தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சிவாய நம - சித்தமெல்லாம் சிவமயமே

பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருள் உண்மை சைவசித்தாந்தத்தில் மிகவும் எளிமையாக சிவாயநம என வணங்கப்படுகின்றது.

இங்கு பதி என்பது இறைவனையும், பசு என்பது ஆன்மாக்களையும், பாசம் என்பது மும்மலங்களையும் குறிக்கும். சிவாயநம என்பது சூட்சும பஞ்சாக்கரம் ஆகும்.

இங்கு

| | | | | |
|---|---|---|---|---|
| சி | - | சிவம் | - | இறைவன் |
| வா | - | அருள் | - | அருட்சக்தி |
| ய | - | ஆன்மா | - | உயிர் |
| ந | - | திரோணசக்தி | - | மாயை, கன்மம் |
| ம | - | மலம் | - | ஆணவம் |

ஆன்மாவிற்கு ஏழு பிறப்புக்கள் உள்ளன. ஆன்மா 12 நிலைகளில் ஒன்றை அடையும். அதாவது சகலர் ஆணவம், கன்மம், மாயை உடையவர்களாக திரிபந்திகள் எனவும், துவிபந்திகள் எனவும் இருவகையாகவும் தூலதேசிகள், அப்பிராத்தா ஆகிய சரீரி, பிரநட்டா ஆகா சரீரி என மூவகைப்படுவர். இவை ஈற்றில் பரிபக்குவமலர்கள், அபரிபக்குவமலர்கள், பதிபதார்த்தங்கள் ஆகவும் மாறுவர். எனவே சகலர் பன்னிருவகையாக மாறுகின்றனர். (2 x 2 x 3) எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா பிறவிப் பெருங்கடலில் (7 x 12) 84 நிலையில் ஒன்றாய் இருக்கும். இது 224 உலகில் விரகிக் காணப்படும். அதாவது 224 x 84 = 18816 நிலைகளில் ($2^6$ x $3^2$ x $7^2$) காணப்படும். பிறவிப் பெருங்கடலின் வடிவினை உருவகப்படுத்துவதற்கு,

கணித உய்த்தறிதலைப் பயன்படுத்தின்,
பிறவிப் பெருங்கடலில் உள்ள மொத்த
ஆன்மாக்கள் $= \sum X_n$

$$X \Rightarrow 1 \rightarrow N$$

$$n = 2^6 \times 3^2 \times 7^2$$

ஏழு ஸ்வரங்களால் இசை எவ்வாறு உருவாகின்றதோ, ஏழு நிறங்களினால் ஓவியம் எவ்வாறு உருவாகின்றதோ அதனைவிடப் பல பரிமாணத்தில் பிறவிப் பெருங்கடலில் ஆன்மா காணப்படுகின்றது. இதனை கணிதவெளியில் ஒருவகைப்படுத்தலாம். கணணியில் காண்பியம் ஆக்கலாம் (Simulation Model) நடராஜப் பெருமானது திருநடனம் இதனையே ஆழமாக உணர்த்துகின்றது. மலை உச்சியில் உள்ள நீர்த்திவலைக்கு ஒப்பானது பிரபஞ்சத்தில் ஆத்மாவின் நிலை. பிரபஞ்சத்தில் ஆத்மாவின் நிலையை உணர்த்துவதே கங்கையைச் சடையில் வைத்த நடராஜ மூர்த்தமாகும். கோடிக்கணக்கான அகிலங்கள் அதிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் உள்ளன என தற்கால இயற்பியல் விஞ்ஞானிகள் உய்த்தறிகின்றனர். இதனைச் சைவசித்தாந்தத்தில் சிவநடனத்தின் அதிர்வு உணர்த்துகின்றது.

ஓங்காரமே உலகத்தோற்றம் என திருமந்திரப் பாடல் (2677) குறிப்பிடுகின்றது.

ஓங்காரத்து உள்ளே உதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத்து உள்ளே உதித்த சராசரம்
ஓங்கார அதீதத்து உயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவரூபமே.

உலக இயக்கத்தினையே நடராஜத் திருநடனம் விளக்குவதாக திருமந்திரப்பாடல் (2753) குறிப்பிடுகின்றது.

மேதினி மூவேழ் மிடும் அண்டம் ஓர் ஏழு
சாதகம் ஆகும் சமயங்கள் நூற்றுஎட்டு
நாதமொடு அந்தம் நாடானந்த நாற்பதம்
பாதியொரு அடிப்பரன் இருபாதமே.

இறைவனின் ஐந்தொழில்களை ஊன நடனம் என்றும், ஞான நடனம் என்றும் வேறுபடுத்தலாம். ஊனநடனத்தில் தூல ஐந்தொழில், சூக்கும ஐந்தொழில், அதிசூக்கும ஐந்தொழில் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். அதிசூக்கும ஐந்தொழிலே ஆத்மாவை இயக்குவது. (Biorhythms) உயிரியல் கடிகாரத்தின் இயக்கத்தில் அதிசூக்கும ஐந்தொழில் அமைகின்றது.

ஆனநடம் ஐந்து அகள சகளத்தார்
ஆடநடம் ஆடி ஐந்து கருமத்து ஆக
ஆன தொழில் அருளால் ஐந்தொழில் செய்தே
தேன் மொழிபாகன் திருநடம் ஆகுமே.

திருமந்திரம் (2727)

சித்த ஒளி, சீவமுத்தி ஒளி என்பதனை திருமந்திரப் பாடல் (2806) விளக்குகின்றது.

அண்ட ஒளியும் அகண்ட ஒளியுடன்
பிண்ட ஒளியால் பதற்றும் பெருமையை
உண்ட வெளிக்குள் ஒளிக்குள் ஒளிந்தது
கொண்ட குறியை குலைத்தது தானே.

ஒளிக்குள் ஒளி ஒடுங்கும் தன்மையை இப்பாடல் கூறுகின்றது. மேலும் 124வது திருமந்திரப் பாடலும் ஒளியுள் ஒளி ஒடுங்குவது பற்றிக் கூறுகின்றது.

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது விஞ்ஞானிகள் ஒளித்துணிக்கைகளை இணையவைத்து அவற்றின் வேகத்தை 100,000 மடங்கு குறைத்து நிரூபித்துள்ளார்.

மேலும் ஓம் எனும் பிரணவ உள்ஒளியினை 2844வது திருமந்திரப் பாடல் விளக்குகின்றது. இது ஆன்மாவின் உள்ளொளியாக உள்ளது.

உரை அற்ற ஆனந்த மோன சொரூபத்தன்
கரை அற்ற சக்தியாதி காணில் அகார
மரு உற்று உகார மகாரம் அதுஆக
உரை அற்ற தாரத்தில் உள் ஒளி ஆமே.

ஆன்மாவில் இறைவனின் சக்தி அத்துவிதமாக உள்ளது. ஆனால் பாச வினைகளினால் அதனை உணரமுடியாது உள்ளது. பாசவினைகள் அறும்போது பதியினை உணரும். இதனை பின்வரும் உண்மை விளக்கம் 50வது செய்யுள் முத்தியில் முப்பொருள் உள்ள நிலைமை என விளக்குகின்றது.

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு – மெத்தவே
இன்பம்கொடுத்தல் இறை, இத்தை விளைவித்தல் மலம்
அன்புடனே கண்டுகொள் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியினைத் திருமந்திரம் அருட்சக்தி தரும் ஞானமே உள் ஒளிக்கு ஒளியாகும் என திருமந்திரம் (2322) கூறுகின்றது.

தோன்றிய பெத்தமும் முத்தியுஞ் சூழ்சக்தி
மான்றும் தெருண்டும் உயிர்பெறும் மற்றவை
தான்தரு ஞானந்தன் சக்திக்குச் சாதனாம்
ஊன்றல் இல்லா உள்ஒளிக்கு ஒளியாமே.

பாசம் என்பது வினைப்பயன் என்பதனை திருமந்திரப்பாடல் (2420) விளக்குகின்றது.

வீட்டும் பதி பசு பாசமும் மீதுற
ஆட்டும் இருவினை ஆங்கு அவற்றால் உணர்ந்து
தாட்டும் நரக சுவர்க்கத்தில் தான் இட்டு
நாட்குற நான்தங்த நற்பாசம் நண்ணுமே.

பாசம் அகல பசு பதியை அடையும் என்பதனை (2406) திருமந்திரப்பாடல் கூறுகின்றது.

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு
பசுத்தன்மை நீங்கி அப்பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிபதார்த்தமாகும் பசுவின் தன்மையினைத் திருமந்திரப்பாடல் (2423) விளக்குகின்றது.

பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசு என்ப
பாசம் பயிலப் பதிபரம் ஆதலால்
பாசம் பயிலப் பதிபசு ஆகுமே.

ஆன்மாவின் மூன்று நிலைகளை தொம்பதம் / துவம் (பிறந்து, இறந்து தோன்றுதல்), தத்பதம் (மேலான சிவபதம்), மற்றும் அசிபதம் சீவன் சிவனாகும் நிலை. இதனை 2437வது திருமந்திரப்பாடல் விளக்குகின்றது.

தோன்றிய 'தொம்' பதம் 'தத்' பதம் சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்மூன்றோடு எய்தினோன்
ஆன்ற பராபரமாகும் பிறப்பு அற
ஏன்றனன் மாளச் சிவமாய் இருக்குமே.

பதி, பசு, பாசம் வேறின்மை பற்றி எல்லாம் சிவமயம் என்பதனை உணர்த்துகின்றது (2405) திருமந்திரம்.

அறிவு அறிவு என்ற அறிவும் அனாதி
அறிவுக்கு அறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியின் பிறப்பு அறுத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி, பசு, பாச அமைப்பே சிவன்கோயிலாகும்.

ஆய பதி தான் அருட் சிவலிங்கமாம்
ஆய பசுவும் அடலேறு என நிற்கும்
ஆய பலிபீடம் ஆகும் நற்பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே.
(திருமந்திரம் 2411)

திருக்கோயிலும் சிவாயநம என்பதனை உணர்த்தி அமைக்கப்பட்டுள்ளது.

"சித்தமெல்லாம் சிவமயமே
நித்தமெல்லாம் சிவதவமே
முத்தமெல்லாம் சிவ நயமே
சத்தமெல்லாம் சிவ பயமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. சைவசித்தாந்தமும் இயற்பியலும்

நவீன இயற்பியல் கோட்பாட்டுண்மைகளை சைவசித்தாந்தம் தன்னகத்தே கொண்டுள்ளது. சிவப்பிரகாசம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருவருட்பயன் போன்ற நூல்களில் இயற்பியல் கருத்தக்கள் ஆழமாக உள்ளன. இவற்றைப்போல் திருமந்திரத்திலும் இயற்பியல் கருத்துக்கள் ஆழமாக அமைந்து உள்ளன. சைவசமயத்தில் மாத்திரமல்லாது தமிழிலே பல இயற்பியல் தத்துவங்கள் தமிழ் சமணசமய நூல்களிலும், தமிழ் பௌத்த நூல்களிலும் அமைந்திருந்தன. அவை பெரும்பாலும் அழிவடைந்துவிட்டன. எஞ்சியுள்ள தமிழ் சித்தாந்த நூல்களைப்பேணி ஆராய்தல் எம் கடமையாகும்.

எண்ணிரண்டு கண்மணிக்குள்
இயங்குகின்ற தெய்வம்
என வள்ளலார் வாக்கும்

எட்டிரண்டும் கூடியே
இலிங்கமான தேவனை
என சிவவாக்கியமும்

“ஏட்டிரண்டையும் ஓர்ந்து மறையெல்லாம்
உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து”
என கருவெளிச் சித்தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டும் இரண்டும் அறியாத
ஏழையர்க்கு எட்டும் சன்மார்க்க பாதமே"
எனத் திருமூலரும்

மெய்யியலைத் துவிதத்தின் அடுக்கில் வெளிப்படுத்துகின்றனர். இதனையே இன்றைய பௌதீக விஞ்ஞானிகள் E8 மாதிரியில் காண்கின்றனர்.

பிரபஞ்சத்தின் இயல்பை ஆராயும் இன்றைய விஞ்ஞானம், புவியீர்ப்பு அலைகளைக் கண்டறிந்துள்ளது. ஒளி அலைகளின் வளைவினை அறிந்துள்ளது. இதனால் நான்காம் பரிணாமத்தை உணர்த்தியும் உள்ளது. இயற்பியலினை குவாண்டம் E8 மாதிரி மூலம் விளக்க முனைகின்றனர். குவாண்டம் கணனிகள் செயற்படத் தொடங்கிவிட்டன.

இவற்றை எம்முன்னோர்களினால் சமய சித்தாந்தத்தில் அளவையியல் என்ற முறையில் அணுகப்பட்டு உள்ளது. உயிரினைப்பற்றியும், ஆன்மாவைப்பற்றியும், உலகை இயக்கும் பக்திபற்றியும் அளவையியல் விளக்குகின்றது. அளவைகளை 10 வகையாகச் சைவசித்தாந்தத்தில் காணலாம். அவையாவன :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) காட்சி அளவை

2) கருதல் அளவை அல்லது அனுமான அளவை

3) ஆகம அளவை அதாவது நூல்களைக் கொண்டு அறிதல்.

4) உவமை அளவை

5) அருந்தா பத்தி அளவை அதாவது உய்த்தறிதல்

6) அபாவ அளவை அதாவது இன்மை அளவை

7) இயல்பு அளவை

8) ஐதீக அளவை

9) மீட்சி அளவை

10) உண்டாம் நெறி அளவை

ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகம் என்று பொருள். வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மைபடுமாறு செய்வது ஆணவமலம். ஆணவமலத்தை இன்றைய இயற்பியலில் சக்தித் துணிக்கையாகக் கருதலாம்.

ஆணவமலம் மட்டும் உடையவை இப்பூதசம்பந்தமான தேகம் அற்றவர்கள். அதாவது விதேகிகள். இவர்களே விஞ்ஞானகலர் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம், கன்மம் உடையவர்கள் பிரளயாகலர் எனப்படுவர். இவர்கள் பிரளயகாலத்தில் சக்தியினுள் ஒடுங்குவர். பிரளயாகலர்களும் தேகம் அற்ற சிவ விதேகிகள் ஆவர்.

பிரளயாகலர்கள் இருவகை. இதில் பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம் பெற்று பதி, பதார்த்தங்களாக மாறுவர். இதில் ஆதிமுத்தசிவன், ஹீகண்டர், வீரபத்திரர், புவனவாசிகள், பரமுத்தசிவன் என்பவர்கள் அடங்கும். பிரளயாகலரில் மற்றையவர்கள் அபரிபக்குவமலர்கள் ஆவர்.

ஆணவம், கன்மம், மாயை உடையவர்கள் சகலர் எனப்படுவர். இவர்கள் தேகம் உடையவர்கள். தேவர்கள், மனிதர்கள் மற்றும் உலக உயிர்கள் இதில் அடங்கும்.

சகலர் ஆணவம், கன்மம், மாயை உடையவர்களாக திரிபந்திகள் எனவும் துவிபந்திகள் எனவும் இருவகையாகவும் தூலதேசிகள், அப்பிராத்தா ஆகிய சரீரி, பிரநட்டா ஆகாசரீரி என மூவகையாகவும் வகைப்படுத்தலாம். இவை ஈற்றில் பரிபக்குவமலர்கள், அபரிபக்குவமலர்கள், பதிபதார்த்தங்கள் ஆகவும் மாறுவர். எனவே சகலர் பன்னிருவகையாக மாறுகின்றனர். (2 x 2 x 3).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்தை தோற்றுவிக்கும் சக்தியையே சைவசித்தாந்தம் சிவமாகக் கூறுகின்றது. பிரபஞ்ச இயக்கத்தினையே சிவநடனமான நடராஜர் விளக்குகின்றது. இப்பிரபஞ்சத்தின் மையமாக தில்லை விளங்குகின்றது.

பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும்பொருட்டு ஆதிசக்தி தொழிற்படும் பொழுது இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என வகைப்படும்.

> தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
> பின்னமிலான் எங்கள் பிரான்.
>
> (திருவருட்பயன் பதிமுது நிலை 2)

சக்தியும் சிவமும் ஒன்றாக காணப்படும் தன்மையை மேற்படி திருவருட்பயன் விளக்குகின்றது. சக்தி பின்னமிலான் என்பது இன்றைய பௌதீகத்தில் அகிலம் பற்றிக் கூறும் பின்னல் மாதிரியை (E8 Spiral model) விளக்குவது போல் உள்ளது. இதனைச் சிவஞானசித்தியாரில் பின்வருமாறு காணலாம்.

சிவஞ்சக்தி தன்னை யீன்றுஞ்சக்தி தான் சிவத்தையீன்று
முவந்திடுவரும் புணர்ந்திங்கலே ருயிரெல்லா மீன்றும்
பவள பிரம சாரியாரும் பான்மொழி கன்னியாகுந்
தவந் தருஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமும் சக்தியும் எவ்வாறு உருமாற்றமடையும் என்பதனை மேற்படி பாடல் விளக்குகின்றது. சிவநவசக்தி பேதங்கள்

| | | |
|---|---|---|
| சதாசிவன் | ⟶ | மனோன்மணி |
| மனோன்மணி | ⟶ | மகேசுவரன் |
| மகேசுவரன் | ⟶ | மகேசுவரி |
| மகேசுவரி | ⟶ | உருத்திரன் |
| உருத்திரன் | ⟶ | உமை |
| உமை | ⟶ | மால் |
| மால் | ⟶ | மகாலட்சுமி |
| மகாலட்சுமி | ⟶ | பிரமன் |
| பிரமன் | ⟶ | சரசுவதி |

இவற்றையே இன்றைய நவீன இயற்பியல் கோட்பாட்டில் திணிவை உடைய துணிக்கைகள் என்றும் வகைப்படுத்துகின்றன. ஒவ்வொரு திணிவை உடைய துணிக்கைகளுக்கும் இணையாக ஒவ்வொரு சக்தியை உடைய துணிக்கைகள் அமைகின்றன. இவைகளே அகிலத்தின் அடிப்படைத் துணிக்கைகளால் அமைகின்றன.

இவை :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்ணிழைவடிவில் 248 வகையான பரிதியில் ஒன்றை ஒன்று தழுவிய வண்ணமும், சுற்றிய வண்ணமும் நடனமிட்டுக் கொண்டு காலவெளியின் தளத்தில் அமைகின்றன என A Geometric Theory of Everything – E8 மாதிரி விளங்குகின்றது.

இச்சக்திகளின் விளைவு பூஜ்ஜியம் (Curled up vectors are zero) என்பதனை சிவஞானபோதம் சூத்திரம் 7 விளக்குகின்றது.

"யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்ரிலது அறியாது
இரு திறன் அறிவுளது இரண்டாலது ஆன்மா"

அதாவது பரமாத்மாவுக்கு (சத்) முன்னால் அசத்தான உலகமும் மாயையும் சூனியங்களாகி விடுகின்றன.

பரமாத்மாவை அறிவில்லாத ஜடமான அசத் அறிவதில்லை. சத்தாகிய பரமாத்மாவையும் அசத்தாகிய ஜடப்பொருளையும் அறிகின்ற அறிவாக ஆன்மா உள்ளது.

ஜீவாத்மா சத்பொருளுமல்ல. அசத்தும் அல்ல. இது இவையிரண்டும் இல்லாமலேயே இவ்விரண்டின் தன்மையை அறிகின்ற அறிவுடையதாகின்றது. எனவே ஜீவாத்மா சதசத் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறி வென்ற பேர் நன்றற. -

திருவருட்பயன்
உயிரவை நிலை 15

அதாவது ஆத்மா அறிவைப்பெற ஐம்புலன் முதலிய கருவிகள் தேவை -

ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகம் என்று பொருள். வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மை-படுமாறு செய்வது ஆணவமலம்.

இதனை

அன்றளவியுர் ளொளியொ டாவியிடையடங்கு
இன்றளவு நின்ற திருள். - திருவருட்பயன் (24)

ஆன்மாவின் தோற்றத்தில் இருந்து சட ஆற்றலை இயக்கும் திரோதனசக்தியானது இருளாகச் சித்திரிக்கப்படுகின்றது. இதனையே இக்கால இயற்பியலில் கருந்துளைகள் (Black Holes) என்கின்றார்கள்.

இருளின்றேல் ஆன்மா இல்லை என்கின்றது திருவருட்பயன். இன்றை இயற்பியலில் இதனை கருந்துளைகள் மூலம் ஒப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளின் றேற்றுன் பென் உயிரியல்பேற் போக்கும்
பொருளண் டேல் ஒன்றாகப் போம்.

- திருவருட்பயன் (27)

திரோதனசக்தி ஆன்மாவிற்கு வீடுபேற்றைத் தருதல் என்பது கருந்துளைகள் அகளும் பிரளய காலமாகும். இதுவே அகிலத்தின் ஒடுக்கமாக அமையும். Big Crunch பிரளயகாலத்தில் தேகம் இல்லாதவர்கள் பிரளயாகலர் ஆவார்.

அகில ஒடுக்கத்தின்போது சிவன் என்கின்ற பதிபதார்த்தம் என்னும் சுடரொளியுடன் சேரும். ஆத்மாவையை பரிபக்குவமலர்கள் என்றும் கூறுவர். மற்றையவை அபரிபக்குவ மலர்கள் என்பர். அபரிபக்குவ மலர்கள் சிருட்டிக் காலத்தில் சகலர் ஆவார். பசுத்தன்மை மறைய பதித்தன்மையை ஆன்மா அடைகிறது.

“நாயான நம் தன்னை ஆள் கொண்ட நாயகனை”

என மணிவாசகர் திருவம்மானையில் பதிபதார்த்தமாகிய நிலையில் பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா இறைவனை அடைய முனையும்போது அது தன்னை விழித்துக்கூறும் நிலையே "நாயேன்". இது தமிழில் தன்மை முன்னிலை நிலையாக கருதப்படும். அதாவது எதிரில் உள்ள இறைவன் நீயே என்றும் இறைவனுக்கு அருகில் பதிபதார்த்தமாக நின்று தனது உடலை நாயே என்றும் விழிக்கும் இடமாக சிதம்பரம் அமைகின்றது.

இதனை மணிவாசகரின் திருவாசகத்தில் பல இடங்களில் காணலாம்.

அதேபோல் அருணகிரிநாதரும் சிதம்பரத்தில் பாடிய திருப்புகழில் (616)

"சித்தி லாட அழைதிடு வார்கவ
முற்ற மாதர் வலைப்புகு நாயெனை
சித்தி ஞானம் வெளிப்படவே சுடர் மடமீதே"

என்று பதிபதார்த்தமாக மாறும் பசுவின் தன்மையே நாயேன் என்ற வெளிப்பாடு.

அகிலத்தின் மையமான தில்லையிலேயே இறைவனுடன் ஆன்மா இணைகின்றது என்ற உண்மை எமக்கு விளங்கவேண்டும். உலக ஒடுக்கத்தின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Big Crunch) எல்லா ஆத்மாக்களும் ஒடுங்கும் இடமாக தில்லை விளங்கும். அதாவது பசுத்தன்மை மறைய பதித்தன்மை அடையும் இடமாக தில்லை விளங்குகின்றது.

உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்றா
முயரும் விஞ்ஞான கலர் பிரளயாகலர் சகலர்
திரையின் மல மலங்கன்ம மலங் கன் மாமாயையை
நிற்கு முதலிருவர்க்கு நிராதாரமாகிக்
கரையில ருட்பரன்று விதா சத்திநி பாதத்தாற்
கழிப்பன் மலஞ் சகலர்க்குக் கன்மவொப்பிற்
றரையிலா சான்மூ ர்த்தி யாதார மாகித்
தரித் தொழிப்பன் மலஞ் சதுர்த்தாசத் திற்பாதத்தால்

சிவஞானசித்தியார் எட்டாஞ்சூத்திரம்

விஞ்ஞானகலர்கள், பிரளயாகலர்கள் ஆகிய இரு வர்க்கத்துக்கும் நிரதிகரணானுக்கிரகம்.

அனந்தாதியனு சதாசிவாதியரிவர்கள் விஞ்ஞானகலர் அபரமந்திரேசுரர்களாகிய சிற்கண்டாதிகள் பிரளயாகலர் ஆவர். பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம் பெற்றுப்பதனுப் பதி பதார்த்தங்களான ஆதிமுத்த சிவன்களாவர். பரிபக்குவ மலர்களின் அனு சதா சிவானந்தாதிகள் மந்திரங்கள் புவனவாசிகள் அபரமுத்த சிவன்களாவர். அபரிபக்குவமலர்கள் மாயைக்கு மேற்சுத்த வித்தைகளுக்குக்கீழ் மலமாத்திர கலுஷிதர்களாய் பசு பதார்தங்களாக இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மமலம் உயிர் கூடுகின்ற உடம்புகளுக்கு காரணமாகும். இது அழிந்தும், தோன்றியும் வருவதால் பிரவாக அநாதியாய் உள்ளது. உயிர்கள் பெறும் உடலுக்கு காரணம் சஞ்சித கன்மம் ஆகும். உயிர்கள் அநுபவிக்கும் இன்ப துன்ப அனுபவங்களுக்கு காரணம் பிரார்த்த கன்மம் ஆகும்.

கன்ம நுகர்ச்சியின் பொருட்டு உயிர்கள் செய்வதே நல்வினை, தீவினைகளாகும். இவற்றை ஆகாமியவினை என்பர். பிரார்த்தவினை அழியும்பொழுது ஆகாமியம் வந்து பிரவாகம் போல் தொடர்ச்சியாகக் கன்மம் தொடரும். இது பிரவாக நாதி எனப்படும்.

ஊழிக்காலத்தில் உயிர்கள் மாயையில் ஒடுங்கும்பொழுது (அதனையே இன்றைய விஞ்ஞானம் கருந்துளைகள் என வரையறை செய்கின்றது) கன்மமும் உயிர்களைவிட்டு நீங்காமல் மாயையில் ஒடுங்கும். இவ்வூழிக்காலமே Big Crunch எனப்படும். அகிலத்தின் ஒடுக்கமாகும் ஆன்மாவின் வியாபகத்திற்கு கருந்துளைகள் இன்றியமையாதவையாகும். கருந்துளை-கள் அழியின் ஆன்மாவும் அழியும்.

ஆசாதியே லணைவ காரண மென்முத்திநிலை
பேசா தகவும் பிணி.

திருவருட்பயன் (28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.நவீன இயற்பியல் கோட்பாடுகளும் திருமந்திரத்தில் பொதிந்துள்ள உண்மைகளும்

அகிலத்தின் தன்மையை ஆராயும் பௌதீகம் கடந்த சில நூற்றாண்டுகளாக பல விஞ்ஞானக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றது. கலிலியோ, நியூட்டன், ஐயன்ஸ்டீன், ஸ்டிபன் ஹாக்கின்ஸ் என்பவர்களது கோட்பாடுகளுக்கு அப்பால் தற்போது விஞ்ஞானம் புதிய கோட்பாடுகளை நோக்கி முன்னேறியுள்ளது. அண்மைய பௌதிக விஞ்ஞானிகள், எல்லா நிகழ்வுகளும் ஒரு குறித்த கேத்திரகணித உருவின் வடிவில் சமச்சீராக நிகழ்வதாக நம்புகின்றனர். இதனை அனைத்துக்குமான கேத்திரகணிதக் கோட்பாடு (A Geometric Theory of Everything) என்று அழைக்கின்றனர். இக் கோட்பாட்டின் பிரகாரம் அகிலத்தில் உள்ள திணிவைத் தரும் துணிக்கைகளும் சக்தியை தரும் துணிக்கைகளும் கேத்திரகணித மாதிரியில் அமைந்து உள்ளன. இக் கோட்பாடுகளில் திணிவை உடைய துணிக்கைகள் போசான் என்றும் (Boson) சக்தியை உடைய துணிக்கைகள் ஃபேர்மியோன் (Fermions) அழைக்கப்படுகின்றன. இவைகளே அகிலத்தின் அடிப்படைத் துணிக்கைகளாக அமைகின்றன. இவை நுண்ணிழை அமைப்பில் 248 வகையான பரிதியில் ஒன்றை ஒன்று தழுவிய வண்ணமும், சுற்றிய வண்ணமும் நடனமிட்டுக் கொண்டு காலவெளித் தளத்தில் அமைகின்றன என E8 கோட்பாடு கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணிவுடைய துணிக்கைகளும் அவற்றுடன் இணையான சக்தியைத் தரும் துணிக்கைகளும்

| Boson (போசான்) | Fermions (ஃபேமியோன்) |
|---|---|
| 1. Phoon (போட்டோன்)<br>ஒளி அலைக்குரிய கணியம் | Neutrons |
| 2. Weak bosons | Electrons |
| 3. Glu ons | Up quark |
| 4. Gravitons<br>ஈர்ப்பு விசைக்குரிய கணியம் | Down quark |
| 5. Frame – Higgs | Up quark |
| 6. Weaker bosons | Down quark |
| 7. X bosons | Up quark |
| 8. More Higgs | Down quark |

ஒவ்வொரு நுண்ணிழையிலும் ஒரு வகையான சக்தியும், ஒரு வகையான திணிவுத் துணிக்கையும் அவற்றின் இணைக்கும் துணிக்கையுமாக மும்மிணைப்புக் காணப்படும் என E8 கோட்பாடு விளக்குகின்றது. குவாண்டம் பௌதீகத்தின் ஆராய்ச்சிகளும் புதிய கண்டுபிடிப்புக்களும் இவ்வாறு நவீன தத்துவங்களுக்கு ஊடாக மிளிருகின்றது.

இவ் ஆராய்ச்சியாளர்களுக்கு சிவநடனம் பற்றியோ தமிழில் பெருமையைப் பற்றியோ, திருமந்திரம் பற்றியோ எதுவுமே தெரியாது. ஆனால் E8 Theory of Everything Model,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கோட்பாட்டின் மாதிரி சிதம்பர சக்கர அமைப்பினையே உடையது. இதனை திருமந்திரத்தின் 91ம் பாடலில் காணலாம்.

இருந்த இவ் வட்டங்கள் ஈராறிரேகை
இருந்த விரேகை மேல் ஈராறிருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்று
இருந்த மனை யொன்றில் எய்துவன் தானே.

அகிலத்தின் இயக்கத்தினை சிவ நடனமாக திருமந்திரத்தின் 913ம் பாடல் எடுத்துக் கூறுகின்றது.

ஒன்று இரண்டு ஆட ஓர் ஒன்றும் உடன் ஆட
ஒன்றினின் மூன்றாட ஒரேழும் ஒத்தாட
ஒன்றினால் ஆடவோம் ஒன்பதும் உடன் ஆட
மன்றினில் ஆடி நான் மாணிக்கக்கூத்தே

இங்கு ஒன்றினின் மூன்றாட என்பது E8 Theory இன் Triality தன்மையை விளக்குவது போல் அமைகின்றது.

உலக ஒழுக்கத்தின் போதும், தோற்றத்தின் போதும், "ஓம்" என்னும் பிரணவ ஒலியுள் ஒடுங்கும் ஒலியில் தோன்றும் என்பதனைத் திருமந்திரப்பாடல் 381 குறிப்பிடுகின்றது.

ஆதியோடு அந்தம் இலாத பராபரம்
போத ம தாகப் புணரும் பராபரை
சோதி அதனில் பரந் தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரையதன் பால் திகழ்நாதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே படைப்பின் முதல் படியாகும்.....பரம் + அபரம் என்பது பராபரம். முதலும் முடிவும் இல்லாத சங்கும் நீக்கமற நிறைந்து இருக்கின்ற பரம்பொருள். இதனையே நவீன சார்பியல் கோட்பாடுகள் Unified field theory என நிறுவ முற்படுகின்றன.

அடுத்து குவாண்டம் பௌதீகத்தின் அடிப்படையாக Bosons, Fermions அமைகின்றன. இங்கு போசோன்கள் சக்தி உடைய துணிக்கைகளைக் கூறப்படுகின்றது. இது விந்துவைச் சுட்டுவதாக அமைகின்றது. அடுத்து ஃபேமியோன் திணிவை உடைய துணிக்கைகளாக அமைகின்றன. இது நாதத்தினைச் சுட்டுகின்றது.

நாதவிந்து நவசிவாயம் என திருமந்திரத்தின் 382ம் பாடலில்

நாதத்தில் விந்துவும் நாத விந்துக்களில்
தீதற்று அகம் வந்த சிவசக்தி என்னவே
பேதித்து ஞானங்கிரியை பிறத்தலால்
வாதித்து இச்சையில் வந்தெழும் விந்துவே

என உலகப் படைத்தலின் ஓம் என்ற ஒலியின் தன்மையைக் கூறுகின்றது. இதுவே குவாண்டம் பௌதீகத்தின் அடிப்படைத் துணிக்கைகளாக அமைகின்றன. அதாவது சக்தி உள்ள துணிக்கைகள், சக்தி அற்ற துணிக்கைகள் என்று அவை வகைப்படுத்தப்படுகின்றன.

ஓம் என்னும் பிரணவ வடிவம் இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தின் உட்பொருள் ஆகும். இதனை திருமந்திரத்தின் 887வது பாடல் பின்வருமாறு கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமே பொன் அம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக் கூத்து அன வரத தாண்டவம்
ஆமே பிரளய மாகும் அத் தாண்டவம்
ஆமே சங்காரத்து அரும் தாண்டவங்களே.

தில்லைப் பொன்னம்பலத்தில் இறைவன் ஓயாது ஆடிக் கொண்டிருக்கின்றான். இறைவன் ஓயாது ஆடும் தாண்டவம் அவைரதத் தாண்டவமாகும். மேலும் அற்புதத் தாண்டவம், ஆனந்தத் தாண்டவம், அவைரதத் தாண்டவம், பிரளயத் தாண்டவம், சங்காரத் தாண்டவம் என அகிலத்தின் அனைத்து இயக்கத்தையும் குறிக்கின்றது. Theory of everything இல் consciousness கோட்பாட்டிற்குள் வரையறுக்கப்படுபவை இவையே ஆகும்.

இதனை உணர்ந்தவர்கள் சித்தர்கள் என திருமந்திரத்தின் 124ம் பாடல் குறிக்கின்றது.

வெளியில் வெளிபோய் விரகியவாறும்
அளியில் அளிபோய் அடங்கியவாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கியவாறும்
தெளியும் அவரே சிவ சித்தர் தாமே.

Expanding Universe தத்துவத்தையும், Blackhole, Warmhole தத்துவத்தையும் எளிமையாக மேற்குறித்த திருமந்திரப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

பேரொளியோடு பாரொளி விளங்குவதைத் திருமந்திரப் பாடல் 1274 விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரொளி அண்டம் பொதிந்துல கெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்து பின்
நேரொளி ஒன்றாய் நிறைந் தங்கு நின்றதே.

குவாண்டம் பௌதீகத்தின் அடிப்படையாக நாதமும் விந்துவும் விளங்குகின்றன. இதனை 1276 வது திருமந்திரப் பாடல்

விந்துவும் நாதமும் ஏக்க விழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்க விரையதாம்
விந்திற் குறைந்திடும் நாதம் எழுந்திடில்
விந்துவை என்மடி கொண்டது வீசமே

நாத விந்து மண்டலமே அகிலம் எனக் கூறப்படு-கின்றது.

ஒளி அணுக்கள் (Photons) இரண்டு விதமாக உள்ளன என்பதனை 1277வது திருமந்திரப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

வீசம் இரண்டுள நாதத் தெழுவன
வீசமும் ஒன்று விரைந்திடு மேலுற
வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்த பின்
வீசமும் விந்து விரிந்து காணுமே.

இதன் தொழில் நுட்பத்தினையே சீன விஞ்ஞானிகள் குவாண்டம் கணனியில் பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுப் பரிவர்த்தனையாலேயே உயிர்கள் இயங்குகின்றன. யோகாசனத்தின் அடிப்படையே இதுவாகும். உயிர்மூச்சு என்பதை தனஞ்சயன் என்ற காற்றாக திருமந்திரம் விபரிக்கின்றது. இக்காற்று உடலில் ஒன்பது இடங்களில் இருக்கின்றது. இக்காற்று 224 உலகங்களிலும் வாழும் உயிர்களில் இருக்கின்றது. இக்காற்று இருக்கும் வரைத்தான் உயிர் இருக்கும். இதனை விளக்கும் 654வது திருமந்திரப் பாடல்

இருக்கும் தனஞ்சயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற்று இருபத்து நான்காய்
இருக்கும் உடலில் இருந்தில ஆகில்
இருக்கும் உடல் அது வீங்கி வெடித்ததே

இது ஆன்மாவுக்கு சார்பியல் அடையாளத்தைக் கொடுக்கின்றது.

பரமனோடு ஆன்ம ஒளி அடங்கும் இன்பநிலை என்பது நவீன சார்பியலில் Unified field theory of Consciousness என்ற வடிவில் ஆராயப்படுகின்றது. ஆன்மாவும் அகிலமும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று விரகுகின்றது என்பது பற்றி ஆய்வுகளே அவை. அதனை திருமந்திரம் சோதியின் சுடராய் என 135ம் பாடலில் கூறுகின்றது.

சத்த முதல் ஐந்தும் தன்வழித்தான் சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியில் சுடரில் சுடர் சேரும்
அத்தம் இது குறித்து ஆண்டு கொள் அப்பிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலாக, உயிராக, அது உணரும் உணர்வாக, உள் ஒளிரும் தீச்சுடராய், எட்டாத் தொலைவாய், விண்ணும் மண்ணும் அளக்க நின்ற பேருருவமாய், உலகைத் தாங்கும் ஆதாரமாக, சூரியனாய், சந்திரனாய் இவற்றை ஆளுகின்றவனாய் பரம்பொருள், அண்டம் முழுவதும் கலந்து நிற்பதை திருமந்திரப் பாடல் 374 குறிக்கின்றது.

ஊனாய் உயிராய் உணர் அங்கியாய் முன்னம்
சேணாய் வான் ஓங்கித் திரு உரு வாய் அண்டத்
தாணுவம் ஞாயிறும் தண் மதியுங் கடந்து
ஆள் முழுது அண்டமும் ஆகி நின்றானே.

இங்கு குறிப்பிடப்படும் அண்டத்தாணு என்பது உலகைத் தாங்கும் அச்சு எனப் பொருள்படும். இதனையே Theory of everything மாறியின் சமச்சீர் அச்சாகக் கருதலாம்.

நவீன இயற்பியல் கோட்பாடுகளின் சாரம் திருமந்திரத்தில் பொதிந்து உள்ளது. திருமந்திரம் ஒரு யுக நூல். இதனை திருமூலர் தமிழுக்கு அருளியமையானது தமிழுக்கு கிடைத்த மிகப் பெரும் சொத்தாகும். இதன் கருத்துக்கள் காலத்துக்கு காலமே உலகில் புரியும். இயற்பியலின் முதன்மையானதே சிவ தத்துவமும் சிவ நடனமும் ஆகும். இதனைத் திருமூலர் தனது 901வது பாடலில் அகிலம் காக்க அருளும் கூத்து என அருளுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே தனக்குத் தகுநட்டந் தானாடுந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடம் தானே

இதனையே இக்கால இயற்பியல் விஞ்ஞானிகள் Theory of Everything அனைத்திற்குமான கோட்பாடு என வடிவமைக்க முனைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. இயற்பியல் மெய்ஞான விஞ்ஞான அஞ்ஞானம்

மீப்பொருள், மீச்சிறுபொருள், புலம் என்பதனை சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற சித்தாந்தத்தில் நோக்குகின்றது. மெஞ்ஞானிகள் இயற்கையைக் காணும் வடிவு சித்தத்தில் உதிக்கின்றது. சாதாரண வாழ்வில் ஒருவருக்கு காலம், வெளியினை உணராத தன்மையினைப் பித்துநிலை சித்தசுவாதீனம் என்பதுபோல் காலம், வெளியினை முற்றாக உணர்ந்தவர்கள் ஞானிகளாகின்றனர்.

அவ்வாறே விஞ்ஞானிகள் இயற்கையைக் காணும் வடிவும் சித்தவெளியிலேயே உள்ளது. இதனை உய்த்தறிதல் என்கின்றோம். சமச்சீர் அச்சுக்களை நோக்குகின்றோம். சைவசித்தாந்தத்தில் இவை அளவையியல் ரீதியாக காட்சிக்கப்படுகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி, விஞ்ஞானத்தின் எல்லைக்கு எல்லை இட்டுக்கொண்டு செல்கின்றது.

பிளந்த மனத்தின் தோற்றப்பாடுகள் விஞ்ஞானத்தையும் உருவாக்கும், மெய்ஞானத்தையும் உருவாக்கும். இரண்டினதும் முடிவு அமைதி அல்லது சாந்தம் அடைதலே ஆகும். நேரடியான சிந்தனைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணகாரிய சிந்தனைகளும் பொது வாழ்விற்கு எம்மை இட்டுச் செல்கின்றது. மையப்படுத்திய சிந்தனை எம்மை தியானநிலைக்கு இட்டுச் செல்லும்.

மனப்பிரமையினால் இன்ப துன்பங்களுக்கு அப்பால் நிலைநிறுத்தும் ஆற்றல் சித்தநிலை ஆகும். இது பொதுவாழ்வுடன் மோதும் நிலையே சித்தசுவாதீனம் ஆகும். சித்தநிலையில் இறைசிந்தனையுடன் மட்டும் வாழ்தல் ஆன்மீக அனுபவமாகும். மனப்பிரமையின் காரணகாரிய வடிவங்களாக கணித வடிவங்களும், இறைவடிவங்களும் அமைகின்றன. சூழல்சார்ந்த இவற்றின் விரிவுகளே இயற்பியல் ஆகும். இயற்பியலும் இறையியலும் ஆழ்ந்த சிந்தனையில் ஒன்றிக்கின்றன. இயற்பியல் இதனைக் கோட்பாடுகள் என வரையறுக்கின்றது. இறையியல் ஆன்மீகநிலை தியானநிலை, முத்திநிலை என உணர்த்துகின்றது. வெளியும் காலமும் மனித மனத்தின் உருவாக்கங்களே. இதனைச் சைவசித்தாந்தத்தில் ஆழமாகக் காணலாம். சிவநடனம், ஆறுமுக சுவாமிகளின் திருக்கோலம் இவற்றின் ஆன்மீக உள்ளுணர்வாக வெளிப்பட்டவையே. இதே கருத்துக்கள் பௌத்தசமயத்திலும் சீனர்களின் சமயத்திலும் உள்ளது. பகவத்கீதையில் கிருஸ்ணபகவானின் பிரபஞ்ச சார்புத் தன்மைக்கான எளிய வடிவமே சக்கரம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி எனப்படுவது ஒரு வகையான தனிப்படுத்திக் குறிப்பிட்டு பார்க்கும் உளப்பாங்கு அன்றி வேறல்ல என்பதையும் தனக்கெனத் தனிநிலையைக் கொண்டதல்ல. காலமும் ஒரு வகை தனிப்படுத்திப் பார்க்கும் உளப்பாங்கே ஆகும். இவை ஒன்றின் சார்பாக இன்னொன்றை நோக்குவதாக அமைகின்றது. இதனையே விஞ்ஞானத்தின் சார்புக் கோட்பாடுகள் விளக்குகின்றது. நவீன சார்பியல் கோட்பாடுகள் ஆழ்மனதில் தோன்றும் இத்தகைய இயற்பியல் சிந்தனைகளுக்கே வடிவம் கொடுக்கின்றது.

வெளி, காலம் தொடர்பான அளவைகள் புறச்சூழ்நிலையை விபரிப்பதற்கு ஒரு பார்வையாளன் பயன்படுத்துகின்ற மொழியின் கூறுகளே ஆகும் என்பதைச் சார்பியல் கொள்கைகள் வலியுறுத்துகின்றது.

இதனையே சைவசித்தாந்தம் சார்ந்ததன் வண்ணமாக இருப்பான் இறைவன் என்கின்றது. பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருள் உண்மை இதனைக் கூறுகின்றது.

சார்பியல் கொள்கை நிறைவு செய்யப்படுகிறதா என்பதை. அதாவது ஒரு கொள்கையின் சமன்பாடுகள், அளவை, அமைப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்திலும் ஒரே மாதிரியாகத் தோன்றுகின்றதா என்பதனை பரிசோதித்து அறிய வெளி, காலம் இவற்றின் அளவைகள் ஓர் அளவையிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றி அமைக்கக்கூடியதாக அமைய வேண்டும். இதனை மரபுவழி இயற்பியலான சைவசித்தாந்தத்தில் ஆழமாகக் காணலாம். முக்காலமும் உணர்ந்த தவஞானிகள் என்போர் இத்தகையவர்கள். இவர்களின் ஆழ்மனதில் பல்வேறு புலங்களை அல்லது அதிர்வுகளை உணரும் தன்மை உள்ளது. இவர்கள் சாதாரண புலன்களைப் பொருட்படுத்தாது ஆழ்தியானத்தில் இருப்பர்.

நவீன சார்பியல் கோட்பாடுகளின்படி ஒளி அலைகளைவிட வேகமான துணிக்கைகளை (Nano quantum waves) மீசிறிய குவாண்டம் அலைகள் மூலம் அவற்றின் துமிநிலைகள் மூலம் அண்டத்தில் நிகழ்ந்த கடந்தகால நிகழ்வாக தற்கணத்தில் காட்சிப்படுத்த முடியும். அதாவது முன்னே நிகழ்ந்தவற்றை தற்போது காணலாம். ஒளியைவிட வேகமான துணிக்கையை கையகப்படுத்தின் கடந்த காலத்தைக் காட்சிப்படுத்த முடியும். இவற்றிற்கு உரிய தொழில்நுட்பவிருத்தி எமக்கு வெகு அருகில் இல்லை. ஆனால் மெஞ்ஞானத்தில் ஆன்மீகநிலையில், முத்திநிலையில் இது கைவரும். இதனை உணரும் ஞானிகள் அரிது. அவ்வாறு உணரினும் அதனை சாதாரண மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்த மாட்டார்கள். மாறாகச் சாதாரண மக்களைப் பக்குவப்படுத்தவே முனைவர். சோடியம், பொட்டாசியம் அயன்கள் பூவுலகில் எவ்வாறு உயிர்களின் இயக்கத்தில் பங்கு கொள்கிறதோ அவ்வாறு புராண உலகிற்கு நுண்துமிகள் அடிப்படையாக அமையும்.

காலம், வெளி, இவற்றிற்கு இடையிலுள்ள பதார்த்தமான மீச்சிறுபொருள் அதன் இயக்கத்தன்மையும், உயிர்த்தன்மையும், அவற்றிற்கான சக்தியை வழங்கும் அல்லது மீப்பெரும்பொருளின் தன்மை, இவற்றிற்கு இடையிலான புலன்கள் என்பவற்றை இயற்பியலில் பௌதிக விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர். காலம், வெளி, இதன் வடிவம் கணனிக்கோப்புக்கள் அடங்குவதுபோல் ஒரு தளத்தில் ஒரு புள்ளியில் அடங்கலாம். காலம், வெளி இனை வெல்ல உருள்தொழில்நுட்பம் துணைசெய்யும். (Wrap up technology).

